# இந்தியாவில் மறுமலர்ச்சிப் பணியில் ஷாஹ்வலியுல்லாஹ் திஹ்லவியின் பங்களிப்பு

எம்.ஏ.ஹபீழ் ஸலபி,ரியாதி (M.A)

*(2000-2004 காலப் பகுதியில் இலங்கை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாணவனாக கற்றுக்கொண்டிருந்த வேளையில் சமர்ப்பித்த – Assignment- ஒப்படையினை சிறு மாற்றத்துடன் இங்கு தந்துள்ளேன்.)*

**அறிமுகம்:**

இஸ்லாமிய உலகம் அதன் சமூக, அரசியல், பொருளியல், மார்க்கப் பண்பாட்டுத் துறைகளில் பயங்கரமானதொரு பின்னடைவை எதிர் நோக்கிய காலப்பிரிவாக கி.பி. 18ம் நூற்றாண்டு காணப்பட்டது. அரசியல் வீழ்ச்சியோடு அறிவுத் துறையிலும் முஸ்லிம் உலகம் தேக்க நிலையை அடைந்ததிருந்தது.

ஆரம்பகால முஸ்லிம் சமூகத்தின் உயர்ச்சிக்கும் உன்னத நிலைக்கும் வழி வகுத்த சுதந்திர சிந்தனை, ஆராய்ச்சி உணர்வு ஆகிய பண்புகளுக்குப் பதிலாக ஷிர்க், மூட நம்பிக்கை, எதையும் ஆழமாக பரிசீலனை செய்யாத மனப்பான்மை என்பன முஸ்லிம்கள் மத்தியில் வளர்ந்திருந்தன. இவ்வாறு, இஸ்லாமிய உலகம் குறிப்பாக முஸ்லிம் இந்தியா மிகப் பயங்கரமான சோதனை மிக்க கால கட்டத்தை எதிர் நோக்கிய சூழ்நிலையிலேயே ஷாஹ் வலியுல்லாஹ் (1703) அவர்கள் பிறந்தார். கி. பி 1703ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 21ஆம் திகதி (ஹிஜ்ரி 1114 ஷவ்வால் மாதம் பிறை 4) இந்தியாவின் டில்லி பிரதேசத்தில், ஷாஹ் அப்துர் ரஹீம் என்பவருக்கு மகனாக இவர் பிறந்தார். இவர் இள வயதிலேயே அல்குர்ஆனை மனனமிட்டதோடு, அறபு மற்றும் பாரசீக மொழிகளில் தேர்ச்சியையும் பெற்றுக் கொண்டார்.

தந்தைக்குப் பின் ரஹீமிய்யா மத்ரஸாவின் தலைமைப் பதவி தாங்கி, மாணவர்களுக்கு பாடம் போதித்து வந்தார். சுமார் 12 ஆண்டு காலம் அப்பணியில் ஈடுபட்டிருந்த அவர், தம் நேரத்தை பிரித்து அதில் ஒரு பகுதியை மாணவர்களுக்குப் பாடம் போதிப்பதிலும், நவீன அறிவியல் நூல்களை ஆய்வதிலும் மற்றொரு பகுதியை ஆன்மிக வழிபாட்டிலும் வேறோரு பகுதியை தம்மைக் காண வருபவர்களிடம்

உரையாடுவதிலும் செலவிட்டு வந்தார். இரவை வணக்கத்திலும், ஓய்வு கொள்வதிலும் கழித்து வந்தார்.

இவரின் பிறப்போடு அடுத்து வந்த நூற்றாண்டில் இஸ்லாத்தின் ஆன்மீக வலிமையும் மார்க்க விழிப்புணர்வும் இந்திய முஸ்லிம்களுக்கு மத்தியில் புதியதாகப் பிரகாசிக்க ஆரம்பித்தன. இந்தியாவின் இஸ்லாமிய மறுமலர்ச்சிக்கும் மாற்றங்களுக்கும் ஷாஹ் வலியுல்லாஹ் என்ற தனி மனிதரின் முயற்சிகளே பின்னணியாக அமைந்தன என்று சில ஆய்வாளர்களால் சிலாகிக்கப்படுகிறது.

புத்துயிர்ப்புவாதம், இஸ்லாத்தில் நவீனத்துவப் போக்கு ஆகிய இரண்டினதும் மூல ஊற்றாக ஷாஹ் வலியுல்லாஹ்வைக் குறிப்பிடலாம். ஆழமான ஆன்மீக நோக்கும் தூரப் பார்வையும் சமய ஞானமும் சமூகவியற் சிந்தனையும் கொண்டவராக ஷாஹ் வலியுல்லாஹ் விளங்கினார். 18ம் நூற்றாண்டிலும் அதன் பின்னரும் இந்திய உபகண்டத்தில் பல இஸ்லாமிய இயக்கங்களின் தோற்றத்துக்குரிய நேரடியான சிந்தனைப் பங்களிப்பு, அவரது சிந்தனைப் பள்ளியையே சார்ந்திருந்தது. இந்தியாவில் 18ம் நூற்றண்டில் முஸ்லிம்கள் எதிர்நோக்கிய அரசியல் வீழ்ச்சி, பொருளாதார நெருக்கடி, கல்விப் பிரச்சினை போன்றவற்றிற்கும் அவர் முன்னேற்றகரமான கருத்துக்களை முன்வைத்தார்.

இந்தியாவில் இஸ்லாமிய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு அடிப்படை ஆதாரமாக அல்குர்ஆனும் அஸ்ஸுன்னாவுமே திகழ வேண்டும் என்ற ஆதங்கம் அவரிடமிருந்த போதும், அவர் பிக்ஹ் மஸாயில்களில் மத்ஹப் சார்ந்து நின்றார் என்ற விமர்சனமுள்ளது. எனவே, தனது சிந்தனைக் கோட்பாடுகள் முழுவதையும் அல்குர்ஆனினதும், அஸ்ஸுன்னாவினதும் மற்றும் மத்ஹப் சார்ந்த அடிப்படையில் கட்டியெழுப்பிய இவர், அல்குர்ஆனை ஆராய்வதில் தீவிர ஈடுபாடு கொண்டிருந்தார் என்பதை அறிய முடிகிறது. இஸ்லாமிய கலைஞானங்கள் பற்றிய அவரது பல நூல்கள் அரசியல், பொருளியல், மெய்யியல் ஆகிய துறைகளையும் உள்ளடக்கியிருந்தன என மதிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மறுமலர்ச்சிப் பணியில் அவரின் வகிபாகம் முக்கியத்தும் பெறுகிறது.

மன்னர் அவ்ரங்கசீப் (1707) மரணமடைந்த பின்னர், முகலாயப் பேரரசின் சாம்ராஜ்யம் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. கிழக்கிந்திய கம்பனி என்ற போர்வையின் கீழ் தோன்றிய ஹிந்து மராட்டியர்கள், ஷீக்கியர்கள், ஆங்கிலேயர் ஆகியோரின் கரங்களில் இந்திய ஆட்சியின் அதிகாரம் மாற்றப்பட்டது.

இதனால், இந்திய இஸ்லாமிய சமூகம் மிகப் பாரதூரமான பின்னடைவுகளையும் சவால்களையும் எதிர்நோக்கத் தொடங்கியது. ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் பிறந்த சூழல், இந்தியா முழுவதும் இஸ்லாத்தின் வாடையற்று, இருளில் மூழ்கி, அறியாமையில் மூழ்கிக் கிடந்தது. இந்தியா முழுவதும் அல்குர்ஆன் – ஹதீஸ் என்பன பற்றிய தெளிவான மார்க்கக் கல்வியறிவு மக்கள் மத்தியில் சிறிதளவும் காணப்படவில்லை.

அன்றைய முகலாய அரசவையின் ஆட்சி மொழியாக பாரசீக மொழியும், பேச்சு வழக்கில் உருது மொழியும் விளங்கி வந்த காரணத்தால், அரபி மொழியிலிருந்து அல்குர்ஆனுக்கு எந்த வித மொழியாக்கமும் வெளிவரவில்லை. இதனால், மக்கள் அறியாமையில் மூழ்கிக் கிடந்தனர்.

இந்திய மண்ணில், இஸ்லாம் நீடித்து நிலைபெற்றிருக்க சாத்தியமில்லாத ஒரு சூழல் உருவாகிய காலமாக 18ம் நூற்றாண்டு காணப்பட்டது. அதனால், இந்திய முஸ்லிம் உம்மத் மிகப் பயங்கரமான அச்சுறுத்தலையும் இனச் சுத்திகரிப்புச் சதிகளையும் சந்திக்க நேர்ந்தது. இந்நிலையில், உலகின் மற்ற பாகங்களில் வசிக்கும் முஸ்லிம்களெல்லாம் “முகலாய சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சி, இந்தியாவில் இஸ்லாமியத்தை அடியோடு அழித்துவிடும் அபாய மணியோசை” என்றே அஞ்சினர். ஆனால், அவர்களின் தவறான கணிப்பு நிறைவேறவில்லை.

“முஸ்லிம்களின் வீழ்ச்சியை இஸ்லாத்தின் வீழ்ச்சியாக விளங்கிக்கொள்ளக் கூடாது. இறைவழிக்காட்டலான இஸ்லாம் ஒரு போதும் வீழ்ச்சியடைவதில்லை. அதனை (சரியாகப்) பின்பற்றாத முஸ்லிம்களே வீழ்ச்சியடைவர். வரலாற்றில், முஸ்லிம்கள் எப்போதெல்லாம் இஸ்லாத்தைப் பூரணமாகப் பின்பற்றினார்களோ, அப்போது எழுச்சி பெற்றிருந்தனர். எப்போதெல்லாம் அவர்கள் இஸ்லாத்தை விட்டும் தூரமாகினார்களோ அப்போதெல்லாம் வீழ்ச்சியடைந்தனர்.” என்ற அறிஞர் அபுல் ஹஸன் நத்வியின் கருத்து அதே இந்தியத் துணைக் கண்டத்தில் ஒலித்தது.

எனவே, முஸ்லிம்களின் தற்காலிகமான பின்னடைவை, முழு இஸ்லாத்தின் வீழ்ச்சியாக எண்ணிட முடியாது என்பதற்குக் காலம் பதில் கூறியது.

ஆகவே, அடுத்து வந்த நூற்றாண்டில் இஸ்லாத்தின் ஆன்மீக வலிமை, இந்திய முஸ்லிம்களுக்கு மத்தியில் புதுப் பொழிவோடு பிரகாசிக்க ஆரம்பித்து விட்டது. இந்த மாற்றத்திற்கும் எழுச்சிக்கும் ஒரு தனி மனிதரின் ஆரம்ப முயற்சிகளே பின்னணியாக அமைந்தன. ஷாஹ் வலியுல்லாஹ் என்ற அவரே 18ம் நூற்றாண்டின் இந்தியாவில் இஸ்லாமிய சீர்த்திருத்தத்தின் மூல கர்த்தாவாக விளங்கினார்.

ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் தன்னுடைய இளம் பராயத்திலேயே தன் தந்தையிடமிருந்து கல்வி கற்று பின்னர், அவர் தன் தந்தையின் மத்ரஸாவில் கல்வி போதிக்கத் துவங்கினார். ஷாஹ் வலியுல்லாஹ்வின் தந்தை, உள்ளூரில் பிரபல்யம் வாய்ந்த அறிஞராக விளங்கினார். தந்தை அப்துர் ரஹ்மான் (1646 – 1719) ஒரு சூபி. அவரின் அறிவிற்காக மக்கள் அவருக்கு மதிப்பளித்தனர். 15 வயதுக்குள்ளாகவே ஷாஹ் வலியுல்லாஹ் பல துறைகளில் கல்விப் பயிற்சிகளைப் பெற்றார். 8 வயதிற்குள் அல்குர்ஆனை முழுமையாக ஓதக் கற்றிருந்தார். பாரசீக மொழியையும் சமய மரபுக் கல்வியையும் சிறப்பாகக் கற்றதோடு, முக்கியமாகத் தந்தையிடமிருந்து ஹதீஸ் இயலில் தேர்ச்சி பெற்றார்.

கி.பி. 1731ல் மக்காவிற்குச் சென்று , ஹிஜாஸில் 14 மாதங்கள் தங்கியிருந்தார். மக்காவில் புகழ்பெற்ற சமய அறிஞர்களிடம் ஹதீஸ் கலையிலும் மார்க்கச் சட்டக் கலையிலும் தேர்ச்சி பெற்றார். மக்காவில் கல்வி கற்றபோது, அப்போதைய சீர்திருத்தவாதி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் (1703 – 1787) என்பவரிடம் கல்வி கற்றார். அங்கு ஹதீஸ் இலக்கியத்தையும் பிக்ஹ் எனும் சன்மார்க்கச் சட்ட விளக்கங்களையும் கற்றுத் தேர்ந்தார்.

இவர் சவூதி அரேபியாவில் தங்கியிருந்த வேளையில், இந்திய அரசியலில் ஒரு கொந்தளிப்பான நிலை ஏற்பட்ட போது, அவரது உறவினர்கள் இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ள வேண்டாமென கேட்டுக் கொண்டனர். ஆனால், ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள், உறவினர்களின் ஆலோசனையை மறுத்துவிட்டு, தான் பணியாற்ற வேண்டிய களம் தன் தாயகம் இந்தியா தான் என்ற அழுத்தமான எண்ணத்தோடு ஜுலை 9, 1732ல்

டெல்லி திரும்பினார். ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் தன் வாழ்நாளில் பெரும் பகுதியை, இஸ்லாமிய அறிவுத் துறையின் பல்வேறு அம்சங்களில் மாணவர்களை பயிற்றுவிக்கும் பணியில் ஈடுபடுத்தினார். அத்தோடு, அவரிடம் கல்வி கற்ற மாணவர்களிடம் பிறருக்கும் அறிவைப் பரப்ப வேண்டினார். அவர் தனது ஓய்வு நேரங்களில் ஆய்வுத் துறையில் ஈடுபட்டு பல நூல்களை எழுதியுள்ளார்.

ஹதீஸ் கலையை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக "தாருல் ஹதீஸ்" எனும் நிறுவனத்தை நிறுவிப் பணி புரிந்தார். ஹதீஸ் கலை பற்றி "தஃவீலுல் அஹாதிஸ்", "அல் இர்ஷாத் இலா முஹம்மதி இல்முல் இஸ்னாத்" ஆகிய நூல்களை இயற்றிய அவர், இமாம் மாலிக் (ரஹ்) அவர்களின் "முஅத்தா" என்னும் கிரந்தத்திற்குப் பெருமதிப்பளித்தார். முஅத்தா நூலுக்கு "அல்முஸவ்வா" என்ற பெயரில் அரபியில் விளக்கவுரையும் "அல்முஸஃப்பா" என்ற பெயரில் பார்ஸியில் விளக்கவுரையும் எழுதியுள்ளார். திருக் குர்ஆனை பார்ஸியில் மொழியெர்த்து அதற்கு விரிவுரையும் எழுதி "ஃபத்ஹு்ர் ரஹ்மான்" என்ற பெயரில் வெளியிட்டார். திருக்குர்ஆனில் காணப்படும் அபூர்வ விடயங்களுக்கு விளக்கம் கண்டு "ஃபத்ஹு்ல் கபீர்" என்ற பெயருடன் ஒரு நூல் எழுதினார்.

ஸூபி தத்துவத்தின் வளர்ச்சி பற்றி "ஹமஆத்" என்ற நூலும் தத்துவ ஞானம் பற்றி "அல் கைருல் கதீர்" என்ற நூலும், இறைநேசர்களின் வாழ்க்கை வரலாற்றை தொகுத்து "இன்திபாஹ் ஃபீ ஸலாஸில் ஔலியா" என்ற பெயரில் நூலும் எழுதியுள்னார்.

"ஹு்ஜ்ஜத்துல்லாஹில் பாலிகா" என்ற மாபெரும் நூலையும், தம் தந்தை பற்றி "அன்ஃபாஸு்ல் ஆரிஃபீன்" என்ற பெயருடனும், தனது வரலாற்றை "அல் ஜு்ஸ்உல் லதீப்" என்றும் நூல்கள் எழுதியுள்ளார். தமக்கு இறைவனிடமிருந்து கிடைக்கப் பெற்ற அறிவ ஞானங்கள் அனைத்தும் ஓர் அருள் வளம் என்பதை வெளிப்படுத்தி, "அத் தஃப்ஹீமாத்துல் இலாஹிய்யா" என்று ஒரு நூலும் எழுதியுள்ளார்.

குறிப்பாக இந்தியாவில் ஹதீஸ் கலையின் வளர்ச்சிக்கு ஷாஹ் வலியுல்லாஹ்வின் பங்களிப்பு மகத்தானது. இந்தியத் துணைக் கண்டத்தில் ஹதீஸ் கலைக்கு புத்துயிரளித்து, அத்துறையில் அரும்பெரும் ஆய்வுகளை நிகழ்த்தி, ஆக்கப் பணிபுரிந்த அவர், ஹதீஸ்

கலையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணியை இஸ்லாமிய உலகம் இன்றும் நன்றியுணர்வோடு நினைவு கூர்கின்றது.

அவர் எழுதிய நூல்களில் மிக முக்கியமானதும் முஸ்லிம் அறிஞர் பெருமக்களின் பாராட்டைப் பெற்ற, உலக பிரசித்தம் அடைந்ததுமான நூல், "ஹுஜ்ஜதுல்லாஹி அல் பாலிகா" வாகும். எகிப்தின் தலைநகரம் கெய்ரோவிலுள்ள அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் பாடத்திட்டத்தில் நீண்ட நாட்களாக அது இருந்து வந்தது என்பது குறிப்பித்தக்கது.

**பிரசாரப் பணி:**

இஸ்லாத்தைவிட்டும் விலகியிருந்த மக்களை, இஸ்லாத்தின் போதனைகளின் பக்கம் திரும்புங்கள் என்பதே ஷாஹ் வலியுல்லாஹ்வின் பிரதான அழைப்பாக இருந்தது. இஸ்லாமிய கோட்பாடுகளை முழுமையாக எடுத்துச் செயற்படுத்துவதன் மூலம் மனிதன் வெற்றி பெறலாம் என்று அவர் கூறினார். இஸ்லாமிய சமூகத்தை அதன் ஆரம்ப தூய நிலைக்கு இட்டுச் செல்வது அவரது பிரதான நோக்கமாக இருந்தது. அதனால், இஸ்லாமியரிடையே புகுந்திருந்த இஸ்லாம் அல்லாத மூட நம்பிக்கைகளையும் வழக்காறுகளையும் அவர் எதிர்த்துப் பிரசாரம் மேற்கொண்டார். அவர் வாழ்ந்த சூழலின் தன்மைகளை உணர்ந்து செயற்பட்டார். மார்க்கத்தைப் பற்றிய பரந்த நோக்கும் அவரிடம் காணப்பட்டது.

சிறந்த மார்க்க அறிஞராக விளங்கிய ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள், இந்திய முஸ்லிம்களிடம் ஓர் இஸ்லாமிய மறுமலர்ச்சியைக் கொண்டு வருவதற்கு தன்னால் இயன்ற அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு பிரசாரப் பணியில் ஈடுபட்டார். அரச பதவியில் இருப்பவர்களின் தீய செயல்கள் குறித்தும், உலக இன்பங்களை நாடிச் செல்லும் வரம்பு மீறிய லௌகீகப் போக்கைக் கைவிட்டு தங்களுடைய தவறுகளுக்காக பாவமன்னிப்புக் கோரும்படி வேண்டினார். சமூகத் தீமைகளை எழுத்தின் மூலமாக வெளிப்படையாக விமர்சிப்பதில் சற்றும் அவர் தயக்கம் காட்டவில்லை. முறையற்ற ஆட்சி புரிந்துகொண்டிருந்த அன்றைய ஆட்சியாளர்களை நோக்கி

*"ஓ தலைவர்களே! நீங்கள் இறைவனை அஞ்சுவதில்லையா? நிலையற்ற இந்த வாழ்வின் உல்லாச சுகத்தைத் தேடுவதும் உங்களது*

*பராமரிப்பின் கீழுள்ள மக்களின் தேவைகளைக் குறித்து அலட்சியப் போக்குடன் நடந்து கொள்வதும் எந்த வகையில் நியாயமாகும்? இவ்வாறான உங்கள் செயல்களின் விளைவால் வலியவர்கள் எளியவர்களை கசக்கிப் பிழிகின்றனர். அறுசுவை உணவை உண்டு மகிழவும் இன்பம் கொண்டாடுவதையும், அழகிய மங்கைகளை மணமுடிப்பதிலும் உங்கள் ஆற்றல்கள் அனைத்தையும் செலவழிக்கின்றீர்கள். ஆடம்பரமாக ஆடை அணிவதிலும் பளிங்குக் கற்களாலான அரண்மனைகளின் அழகிய அறைகளில் வசிப்பதிலுமே உங்களது கவனம் முழுவதையும் திருப்பியுள்ளீர்கள்."*

**என்று ஆடம்பர வாழ்க்கை முறையைக் கண்டித்தார்.**

**சமூகப் புனர்நிர்மாணப் பணிகள்:**

**சீர்குலைந்து போயிருந்த பொது மக்களினது சமூக வாழ்க்கை முறையை சீர்படுத்திக்கொள்ளவும், இஸ்லாம் ஏற்படுத்தியிருக்கும் ஹலால் – ஹராம் வழிமுறைகளை பிரித்தறியும்படியும் செலவினங்களை சுருக்கிக் கொள்ளவும் நேரிய வழியில் பொருளை ஈட்டும்படியும் வேண்டிக் கொண்டார். இளைஞர்கள் கட்டுப்பாடின்றி செயற்படுகின்றமை, கடமையின் மீதான அலட்சியப் போக்கு, மது, போதைப் பொருள் பாவனை, சாமானியர்களை இம்சித்தல் போன்ற செயல்களிலிருந்து விலகிக் கொள்ளுமாறு போதனை செய்தார்.**

**மேலும், அன்றைய தொழிலாளர்கள், கலைஞர்கள் போன்றோரிடம் காணப்பட்ட நேர்மையின்மை, மார்க்கம் விதித்துள்ள எல்லைக்கோடுகளை மிகச் சாதாரணமாக மீறுதல், மூட நம்பிக்கைகள், மௌட்டீகப் பழக்கவழக்கங்கள், வீட்டுக் கடமைகளை ஆற்றுவதில் அலட்சியப் போக்கு போன்ற பல்வேறு தீமைகள் குறித்து தனது ஆழ்ந்த வேதனையை வெளிப்படுத்தினார். இவை குறித்து மக்களுக்கு அவரால் முடிந்தளவு விரிவாக விளக்கினார்.**

*"உங்களுடைய காலை, மாலை வேளைகளை இறைவனைத் தியானிப்பதிலும் பகல் பொழுதின் பெரும் பகுதியை வியாபாரத்திலும் செலவழியுங்கள். உங்களுடைய*

*செலவு உங்களது வருமானத்தை விடக் குறைவாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள். உங்களால் எவ்வளவு சேமித்து வைக்க முடியுமோ, அதைக் கொண்டு வழிப்போக்கர்களுக்கும் தேவையுடையோர்களுக்கும் உதவுங்கள். ஒரு குறிப்பிட்ட பகுதியை உங்களுடைய எதிர்பாராத செலவினங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள்”* என்றும் அவர் அவர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

ஷாஹ் வலியுல்லாஹ் அவர்களுடையதும் அவர்களைப் பின்பற்றியவர்களுடையதுமான சமூக சீர்திருத்தப் பணிகளுக்கும், சவுதி அரேபியாவின் சீர்தருத்தவாதி முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் அவர்களின் சிந்தனைத் தாக்கத்தின் வரிசையில் தோன்றிய சீர்திருத்தவாதிகளின் பணிகளுக்குமிடையே எந்தப் பெரிய வேறுபாடும் காணப்படாததால் இவற்றையெல்லாம் ஆழ்ந்த அவதானத்திற்கும் வரலாற்றுப் பரிசீலனைக்கும் உட்படுத்திய மேற்கத்தேய எழுத்தாளர்களில் பலர், இவை இரண்டும் ஓர் இயக்கம் தான் எனக் குறிப்பிடுகின்றனர். ஆனால், அவர்கள் இந்த முடிவில் தவறிழைத்துக் கொண்டனர். *“இருவரும் ஒரே காலத்தவராயினும் சிந்தனையில், தஃவா அணுகுமுறையில், சமூகத்தில் தாக்கம் விளைவித்த படிமுறைகளில் மாறுப்பட்டுக் காணப்பட்டனர்”* என்பதே நடுநிலை விமர்சகர்களின் நோக்காக இருக்கிறது என்பது கவனிக்கத்தக்கதாகும்.

**ஆன்மிக சிந்தனைகள்:**

ஷாஹ் வலியுல்லாஹ்வினுடைய ஆன்மிக எண்ணக்கரு *“மார்க்கம் தான் முஸ்லிம்களுக்கு பலமும், சக்தியும் தரும் மூலாதாரமாக இருந்து வருகின்றது”* என்பதாகும். எனவே, இவரது முக்கிய நோக்கம் முஸ்லிம்களை இஸ்லாத்தைக் கற்பதற்கு அழைப்பதாக இருந்தது. இஸ்லாத்தின் ஏகத்துவக் கருத்தில் பலமான நம்பிக்கை வைத்திருந்த இவர், இஸ்லாமியக் கொள்கைகளை தூய்மைப்படுத்துவதற்காக பாடுபட்டு, காலத்தின் சவால்களை எதிர் கொள்வதற்கேற்ற புதிய புத்திஜீவிகளை உருவாக்க முயன்றுள்ளார். அத்தோடு, சமூகவியல், ஒழுக்கவியல், பொருளியல் போன்ற துறைகளும் ஆன்மிகமும் இரு அம்சங்களைக் கொண்டுள்ளன என்று விளக்கியுள்ளார்:

1. *இறைவனுக்கும், மனிதனுக்குமிடையிலான் உள்ள தொடர்பு.*
2. *மனிதனுக்கும், மனிதனுக்குமிடையிலான தொடர்பு.*

முதலாவதாக, அது மனிதனுக்கும், இறைவனுக்குமிடையேயான தனிப்பட்ட உறவாகும். எந்த மனிதனும் முழுமையாக ஆன்மீக வாதியல்ல.

இஸ்லாம், ஒரு தனிப்பட்ட நபரை சுதந்திரமான ஒரு தனிப்பட்ட நபராகவே கொள்கின்றது. ஒரு சமூகத்தின், அல்லது ஒரு குடும்பத்தின் அங்கத்தவனாக அவனைக் காண்கிறது. சமூக நீதியானது, ஒரு தனிப்பட்ட நபரின் முன்னேற்றத்திற்குத் தேவைப்படுகிறது என்றார்.

**ஆன்மா பற்றிய சிந்தனை:**

“அனைத்து உயிர்களும் இறைவனால் படைக்கப்பட்டு மீண்டும் இறைவனைச் சென்றடைவதாகும். எனவே இவ்வுலகில் மனித உயிர்கள் ஒன்றுக் கொன்று மதிக்கப்படுதல் வேண்டும்” என மனித ஆன்மாவைப் பற்றி ஷாஹ் வலியுல்லாஹ் பேசினார்.

இந்திய முகலாய ஆட்சியின் போது ஹரிஜனங்கள் போன்ற கீழ் இனத்தவர்களுக்கு சமமான நீதியினை அவ்வாட்சி வழங்கிய போது, மேல் ஜாதி இனத்தவர்கள் அதனை எதிர்த்தனர். மேல் ஜாதியினரின் இவ்வெதிர்ப்பின் போது, அதனை மறுத்து, மனித உயிர்கள் அனைத்தும் ஒன்றுக்கொன்று சமமானவை. இறைவனால் படைக்கப்பட்ட எல்லோரும் இறைவனிடத்தில் சமனானவர்கள் என்ற கருத்தினை வெளியிட வேண்டிய கட்டாயம் ஷாஹ் வலியுல்லாஹ் அவர்களுக்கு ஏற்பட்டது.

இவர், பௌதிக அதீதம் (Meta Physics) அதன் உள்ளார்ந்த கருத்துக்கள் என்பவற்றை பாரசீக மொழியிலும் அரபி மொழியிலும் 50 – 70க்கும் இடைப்பட்ட தொகுப்புகளாக வெளியிட்டுள்ளார்.

இவருடைய நூல்களில் மிகவும் முக்கியமாக இந்தியா, பாகிஸ்தானில் வாழும் முஸ்லிம்களின் ஆத்மீக வாழ்வு, அவற்றுக்கும் மனிதனுக்குமிடையிலான தொடர்புகள் பற்றி அதிகளவு பேசுகிறது. அல்குர்ஆனையும், அஸ்ஸுன்னாவையும் கற்பிப்பதன்

மூலமாக ஷாஹ் வலியுல்லாஹ், இஸ்லாமிய பௌதீக அதீதத்தை மீள்வடிவமைப்பதற்கும் முயற்சித்தார் என மெய்யியல் ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

**வரலாற்று நோக்கு :**

வரலாறு என்பதை வெறும் சம்பவங்கள், நிகழ்ச்சிகளின் தொகுப்பாக நோக்காமல், வரலாற்றின் அசைவையும் ஓட்டத்தையும் இயக்குவிக்கின்ற சக்திகளை இனங்கண்டு அச்சக்திகளின் பின்னணியில் வரலாற்றை நோக்கி விமர்சிக்கும் பணியே வரலாற்றுத் தத்துவத்தின் பணியாகும் என்று கூறியுள்ளார். ஷாஹ் வலியுல்லாஹ் அனைத்து விடயங்களையும் அல்குர்ஆனின் கண்ணோட்டத்தில் நோக்கி விளங்கியுள்ளமையை அவருடைய வரலாற்றுத் தத்துவத்தை நோக்கும் போது கண்டு கொள்ளலாம்.

இவரின் வரலாற்றுத் தத்துவம் அவரது "தஃவீலுல் அஹாதீஸ்" எனும் நூலில் வரலாற்று நிகழ்ச்சிகள், வரலாற்றுக் கருத்தோட்டம், வரலாற்று விமர்சனம், வரலாற்று அணுகுதல் ஆகிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அல்குர்ஆனின் கருத்துப்படி வரலாறு என்பது வெறும் வரலாற்றுச் சம்பவங்களின் தொகுப்பல்ல, வரலாற்றுச் சம்பவங்களின் வர்ணனை விளக்கமுமல்ல. உண்மையில் அது சரித்திர ஓட்டத்தின் நியதிகளை விளக்கும் தத்துவமாகும். எனவே, இறை வழிகாட்டுதலின் அடிப்படையில் காலத்திற்குக் காலம் மனித இனத்திற்கு வழங்கப்பட்ட மதிப்புகளுக்கு இணங்க மனித வாழ்வின் நிகழ்ச்சிகளை விளங்கி, விமர்சிப்பதே அல்குர்ஆனின் வரலாற்றுத் தத்துவத்தின் சிறப்பம்சமாகும். இங்கு தான் ஷாஹ் வலியுல்லாஹ் தனது வரலாற்றுத் தத்துவத்திற்கான கருப்பொருளைப் பெற்றுக் கொண்டார் என்பது புலனாகிறது.

**திருக்குர்ஆன் மொழியாக்கமும் சட்டத்துறைப் பங்களிப்பும் :**

அவர் செய்த மாபெறும் பணிகளில் ஒன்று, அரபி மொழியை அறியும் வாய்ப்பை கிடைக்கப் பெறாதவர்கள், அருள் மறை குர்ஆனின் அறிவுரைகளை விளங்கிச் செயல்படுத்துவதற்காக வேண்டி முதன் முதலாக பார்ஸி மொழியில் திருக்குர்ஆன் மொழியாக்கத்தை உருவாக்கியமையாகும். அவருக்குப் பின் அவரின் புதல்வர்கள் உருது மொழியில் திருக்குர்ஆனை மொழியாக்கம் செய்தனர். அரபி மொழியிலிருந்து பிற மொழிகளில் திருக்குர்ஆனுக்கு முதன் முறையாக மொழி மாற்றம் செய்தவர்கள் ஷாஹ்

வலியுல்லாஹ் அவர்களும், அவரது புதல்வர்களுமேயாவர் என்பது இங்கு நினைவு கூறத்தக்கதாகும். ஆயினும் அன்றைய உலமாக்களில் பெரும்பாலனோர் அவரது அல்குர்ஆன் மொழிமாற்றப் பணி குறித்து கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆனாலும், அவரது அல்குர்ஆனிய பிரசாரத்தின் குறிப்பிடத்தக்க மற்றொரு சிறப்பம்சம் என்னவென்றால், திருக்குர்ஆன் விரிவுரைகளுக்கு அழகும் நயமும் ஏற்படுத்துவதற்காக வேண்டி யூதர்களின் இலக்கிய மூலாதாரங்களில் காணப்பட்ட ஆதாரபூர்வமற்ற போக்கை வன்மையாக விமர்சித்தமையாகும்.

இஸ்லாமிய சட்டம், சமூகத்தின் சிந்தனை வளர்ச்சியோடு இணைந்து செல்லத் "தக்லீத்" தடைக் கல்லாக அமைவதைக் கண்டித்த அவர், சட்டத்துறையில் இஜ்திஹாதிற்குரிய இடம் வழங்கப்படல் வேண்டுமென வலியுறுத்தினார். "அல் – இக்துல் ஜத்ப் அஹ்காமில் இஜ்திஹாத் வத் தக்லீத்" எனும் அவரது நூலில் இக்கோட்பாடு விளக்கப்படுகின்றது. இவ்வாறு, ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் சட்டத்துறையிலும் நிபுணத்துவம் பெற்று விளங்கினார்,

**அரசியல் கோட்பாடு:**

ஷாஹ் வலியுல்லாஹ்வின் சமுக, பொருளாதார, மெய்யியல் பற்றிய கோட்பாடே ஆட்சி பற்றிய அவரது அரசியல் தத்துவத்திற்குப் பின்னணியாக அமைகின்றது. ஆட்சியின் நோக்கம் நன்மையை வளர்த்தலாகும். அவரைப் பொறுத்தவரையில் ஆட்சி என்பது தன்னளவில் முற்றுப் பெற்றதன்று. அது, ஒன்றை அடைவதற்கான சாதனமாகும். அவரது "இதாலதுல் ஹபா அன் கிலாபதுல் குலபாஃ" என்ற நூலில்,

*"இஸ்லாமிய ஆட்சியின் (கிலாபத்) கடமைகளை தெளிவாக விளக்குகின்றார். பெருமானார் (ஸல்) அவர்களின் விருப்பத்திற்கும் ஆணைக்கும் ஏற்ப ஷரீஅத் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கு நிறுவப்படும் ஆட்சி முறையே 'கிலாபத்' ஆகும். கிலாபத்தின் முக்கிய பணி இஸ்லாத்தின் போதனைகள், கோட்பாடுகளுக்கு புத்துயிர் அளிப்பதும் அதனை நடைமுறையில் செயல்படுத்துவதும் சமுகத்தின் தீமைகளைப் படிப்படியாக இல்லாதொழிப்பதுமாகும்"*

இஸ்லாமிய மறுமலர்ச்சியை இந்தியாவில் ஏற்படுத்துவதற்கு அடிப்படை ஆதாரமாக ஷாஹ் வலியுல்லாஹ்வின் சிந்தனைகள் வழிவகுத்தன. நவீன இந்தியாவின் இஸ்லாமிய சிந்தனை மீள் வடிவமைக்கப்படுவதில் ஷாஹ் வலியுல்லாஹ்வின் சிந்தனைக்கு முக்கிய பங்குண்டு. அந்தவகையில், இஸ்லாமிய சமூகம் மீள் எழுச்சி பெற வேண்டும் என்ற கண்ணோட்டத்தை தத்துவார்த்தமாகவும் நடைமுறை ரீதியாகவும் முன்வைத்தை முன்னோடிகளாக அல்லாமா இக்பாலும் ஷாஹ் வலியுல்லாஹ்வும் கருதப்படுகின்றனர்.

**தாக்கம் :**

சமூக மறுமலர்ச்சியைக் காண்பதற்காக எல்லாத்தளத்திலும் கருத்துக் கூறிய இவர். நாம் மேலே விளக்கிய பல்துறைகளிலும் மறுமலர்ச்சியை ஏற்படுத்த முனைந்துள்ளார். இவரின் ஆழ்ந்த புலமையின் அனைத்து அம்சங்களையும் பிரதிபலிக்கும் நூலாக "ஹுஜ்ஜதுல்லாஹ் அல் பாலிகா" என்பது காணப்படுகிறது. இந்நூலில் இஸ்லாமிய போதனைகளைத் தர்க்க ரீதியாக அறிவியல் கண்ணோட்டத்தில் விளக்கியுள்ளார். இதன் முன்னுரையில்,

*"இஸ்லாமிய சட்டங்களையும் கோட்பாடுகளையும் தர்க்க ரீதியாகவும் பகுத்தறிவுக் கண்ணோட்டத்திலும் சமர்ப்பிப்தற்கான காலம் கனிந்து விட்டது"*

என்று குறிப்பிடுகிறார். இதில் ஷெய்குல் இஸ்லாம் இமாம் இப்னு தைமியா (ரஹ்), கஸ்ஸாலி (ரஹ்) ஆகியோரின் செல்வாக்கும் காணப்படுகிறது. மதக் கோட்பாடு, அரசியல் தத்துவம், பொருளியல் கோட்பாடு, வரலாற்றுத் தத்துவம் ஆகியவற்றைப் பற்றிப் பேசி, தனது சீர்திருத்த ஆளுமையின் தன்மையையும் சிந்தனையின் தனித்துவத்தையும் இனங்காட்டினார்.

அவர் 1762 ஆகஸ்ட் 10ஆம் திகதி மரணிப்பதற்கு முன்னர் இஸ்லாமிய கலைஞானத்தின் பல துறைகள் குறித்தும் எழுதியிருந்தார். அவர் தனது வாழ்நாள் முழுவதையும் அறிவாக்கப் பணியிலும், சீர்திருத்தப் போராட்டத்திலுமே அர்ப்பணித்துக்கொண்டார். அவர் தனது எழுத்துப் பணி போக இஸ்லாத்திற்காக தியாகம் செய்யும் மனப்பான்மையைக் கொண்ட ஓர் அறிஞர் குடும்பத்தை உருவாக்கும் ஒரு

பயிற்சிப் பாசறையாக விளங்கினார். தாருல் உலூம் தேவ் பந்த் (1867), நத்வத்துல் உலமா (1863) என்பன அவரது சிந்தனைத் தூண்டுதலினால் உருவான உயர் கல்வி நிறுவனங்களாகும். இதில் பயிற்சி பெற்ற அவர்களின் மாணவர்கள் பலரும் பின்னாளில் தங்களது ஆசானின் அறிவுப் போதனைகளையும் ஆக்கப் பணிகளையும் முன்னெடுத்துச் செல்லப் பங்களித்தார்கள்.

இந்த வகையில் ஷாஹ் வலியுல்லாஹ் தனது கோட்பாடுகளையும், கொள்கைகளையும் உலகிற்கு அறிமுகப்படுத்த முயன்றார். ஆனால், அவர் வாழ்ந்த காலப்பகுதியில், அவரது முயற்சிகளுக்கு ஏராளமான தடைகள் இருந்தன. எனினும், தனது ஆதரவாளர்களது உதவியுடன் மறுமலர்ச்சிப் பணிகளை இந்தியாவிலும் ஏனைய நாடுகளிலும் பரவச் செய்தார்.

சூபிஸம், அறிவு, ஆன்மா, சட்டம் போன்ற கருத்துக்களை அவரது சிந்தனை உள்ளடக்கி இருந்ததால் மேற்கிலும் இவர் படிக்கப்படத் துவங்கினார். எனவே, இந்தியாவில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதற்காக அறிவு, ஆன்மிக, பொருளாதார, சமூக அரசியல் ரீதியாக பல்வேறு ஆக்கப் பணிகளை மேற்கொண்டுள்ளார். இந்தியாவில் ஓர் எழுச்சி மிக்க இஸ்லாமிய மறுமலர்ச்சியின் உதயத்திற்கு இவரது பணிகள் பல் வகையில் துணை நின்றது என்று கூறலாம்.

அவர் வாழ்ந்த 18ம் நூற்றாண்டு காலத்துக்குரிய பழைமைவாதங்கள் அனைத்திலிருந்தும் அவர் விடுபடவில்லை என விமர்சிக்கப்படுகிறார். ஆனால், தீவிரமாகவோ, வெறும் அடையாளமாகவோ அடுத்த யுகத்திற்குரிய விடயங்களை அவர் முன் வைத்தார் என்பதில் தான் அவரது பணியின் முக்கியத்துவம் அடங்கியுள்ளது. நவீன இந்திய உபகண்டத்தில் சமய, அரசியல் வாதங்களிலும் எழுச்சி நடவடிக்கைகளிலும் ஷாஹ் வலியுல்லாஹ்வின் சிந்தனைகளே தீர்மானமான பங்காற்றியதை அவதானிக்க முடிகிறது. தூய்மைவாத சமய சீராக்கத்திற்கும் நவீனத்துவக் கொள்கை மற்றும் பிரித்தானிய எதிர்ப்புக்கும் அவரது சிந்தனைப் பள்ளி நேர் முகமான பங்கைச் செலுத்தியுள்ளது என்பதை மறுக்க முடியாது.

நவீனத்துவத்திற்கெதிரான அவரது நடவடிக்கையும் அறப் போராட்டம் பற்றிய போதனைகளும் பிரித்தானியரை எதிர்ப்பதற்காகவே பயன்படுத்தப்பட்டன. அத்தோடு,

முகலாயப் பேரரசின் பாதுகாப்பிற்காகவும் பயன்படுத்தப்பட்டன. இஸ்லாமிய தூய்மை வாதத்தையும் சீர்திருத்தத்தையும் அவர் நேர்கணிய, அல்லது சாதகமான முறைகளின் மூலமே நிலைநாட்ட முயன்றார். இவரைப் பற்றி மௌலானா மௌதூதி (ரஹ்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"ஷாஹ் வலியுல்லாஹ் அவர்கள் முற்றிலும் ஓர் உண்மையான, தலை சிறந்த இஸ்லாமிய அறிஞராக விளங்கினார். அவர் மக்கள் மத்தியில் பெரும் மதிப்பும், தகுதியும் வாய்ந்த அந்தஸ்தைப் பெற்றிருந்தபடியால் ஒவ்வொரு சீர்திருத்தவாதியும் சுயநல எண்ணத்தோடும் தங்களது மனம் போனவாறும் அவரைத் தவறான முறையில் அறிமுகப்படுத்தியும் அவரது வார்த்தைகளை தவறான முறையில் விளங்கியும் திரித்துக் கூறியும் வந்துள்ளனர். மூலமொழியான அரபி மற்றும் பார்ஸியிலுள்ள அவரது நூல்களை வாசித்து, அறிந்த எவரும், அவர்கள் "ஆதரவாளர்கள்" என்று சொல்லிக் கொள்பவர்களின் நேர்மையற்ற வெளி வேஷத்தை புரிந்து கொள்வர். அவரது எழுத்துக்களில் எங்குமே காணப்படாத வகையில், அவரது வார்த்தைகளுக்கு வினோதமான, அற்புதமான அர்த்தங்களைக் கொடுத்து அவற்றினின்று புதிய கருத்துக்களை மக்களிடையே ஏற்படுத்தி வருகின்றனர். அவர் பகுத்தறிவுவாதத்தின் மேலாதிக்கம் குறித்தோ இஸ்லாத்தினின்றும் அரபுத்துவ பண்புக்கூறுகளை நீக்கி விடும்படியோ ஒரு போதும் வாதித்ததில்லை. அவருடைய அந்தஸ்து இஸ்லாத்தின் பார்வையில் ஓர் உண்மையான மார்க்கப் புணரமைப்புச் செய்த மேதையின் (முஜத்தித்) நிலைக்குச் சமமாகும். புதியவற்றை புகுத்தும் புதுமையாளராக அவர் விளங்கவில்லை. அரசியலில் ஒரு மலர்ச்சியை ஏற்படுத்துவதற்கு முன் மக்களை அறிவு ரீதியான ஒரு புரட்சிக்குத் தயார் செய்ய அவர் முடிவு செய்தார்."*

இவரது சிந்தனையில் பல்வேறு தவறுகளும், சிக்கல்களும் இருந்ததாக பல விமர்சனங்கள் உள்ளன. இஸ்லாத்திற்குள் இந்து மத, கிறிஸ்தவ மத

அனுஷ்டானங்களையும் உள்ளடக்கினார் என்றும், மேற்கத்திய கலாசாரத்தின் புதிய வழியில் சிந்திக்கும் நவீன முஸ்லிம்களின் முன்னோடி என்றும், இஸ்லாத்திற்குள் மேற்கத்திய கலாசாரத்தின் புதிய வழிமுறைகளை பிறர் புகுத்திவிடுவதற்கு எளிதான வகையில் தர்க்க ரீதியான காரணங்களை ஏற்படுத்தியவர் என்றும் ஷாஹ் வலி வலியுல்லாஹ் அவர்கள் மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. எனினும், இக்குற்றச்சாட்டுக்கள் வெறும் கற்பனையும் புனைந்துருவாக்கலும் என்ற மாற்றுக் கருத்தும் உள்ளது.

ஏனைய சிந்தனாவாதிகளையும்விட ஷாஹ் வலியுல்லாஹ்விடம் இருந்த விஷேட பண்பு சமூக நிலைப்பட்ட கருத்துக்களை சமூகக் கண்ணோட்டத்திற்குரியதாக காண்பதற்கு அவரிடமிருந்த உந்துதலாகும். மனிதனை அர்த்தமற்ற மத அகமியங்களிலிருந்தும் மௌட்டீகக் கொள்கைகளிலிருந்தும் அவர் விடுதலை செய்ய முயற்சித்தார். சாதாரண வாழ்வில் வெற்றி பெறத் துடிக்கும் ஜீவனுள்ளவனாக மனிதனை அவர் கண்டார். அதனால் பொருளாதார விடுதலை, சமூக நீதி, உலகில் மனித மகிழ்ச்சி பற்றி அவர் விரிவாக விளக்கமளித்தார். சமயக் கோட்பாடுகளை ஷாஹ் வலியுல்லாஹ் சாதாரண மனிதனின் வாழ்க்கை உணர்வுகளுடன் இசைவுபடுத்தினார் என்று இதற்குப் பொருள் கொள்ளலாம்.

இவ்வாறு ஷாஹ் வலியுல்லாஹ்வின் சிந்தனைகளும் அவரது பணிகளும் இந்தியாவில் இஸ்லாமிய மறுமலர்ச்சியிலும் இயக்கத் தோற்றத்திலும் பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளது.

**உசாத்துணைகள்**


1. எம்.எஸ்.எம். அனஸ் (2001) தற்கால இஸ்லாமிய சிந்தனை,பண்பாட்டு ஆய்வு வட்டம் – பேராதனை.
2. அதிர்வு 2000/2001 மாணவர் ஒன்றியம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம். ஒலுவில்.
3. Hussein Seyyed Nasar,History of Islamic Philosophy
4. M.M.Sherif, A History of Muslim Philosophy
5. சமரசம் 16–30 நவம்பர் 2017
6. இஸ்லாமிய சிந்தனை — மலர்– 139 (2014)
7. இஸ்லாமிய சிந்தனை –மலர் – 4 (1981)